வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஊீளநாடு








Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 03.08.2026 திங்கட்கிழமை இதழ் : 209 பக்கங்கள் : 08


## வசாவிளான் மக்களும் போராட்டத்தில் குதிப்பு!

### காணிகளை விடுவிக்கக் கோரி



யாழ்ப்பாணம், ஒக. 03

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வசாவிளான் மக்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி.வடக்கில் இருந்து 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளியேற்றப்பட்ட மக்கள் 36 வருடங்கள் கடந்தும், அவர்களின் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்ப அனுமதிக்கப்படவில்லை.

07

# ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவருடன் 6 தமிழ்க் கட்சிகள் இன்று முக்கிய பேச்சு!

### அரசமைப்பு உருவாக்கம், மாகாண சபைத் தேர்தல் காணி விடுவிப்பு தொடர்பில் கலந்திரையாட முடிவு

கொழும்பு, ஒக. 03

தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி ஒன்றிணைந்து செயற்படுவதற்கான தமது தீர்மானத்தை கடந்த மாதத் தொடக்கத்தில் அறிவித்த 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளும் தமது சுயாதீனத்துவத்தையும் கொள்கைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் பேணிக்கொண்டு, பொது இணக்கப்பாடு எட்டப்படும் விடயங்களில் தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்தன.

அதன் நீட்சியாக, தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதியை சந்திப்பதற்கு நேரமொன்றை வழங்குமாறு அக்கட்சிகளின் பிரதிநிதிகள் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இன்று திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு மேற்படி 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது விசேடமாக புதிய அரசமைப்பு உருவாக்கம்,

07

## பலாலி மக்களும் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 03

வலி.வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி பலாலிச் சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏழாவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும்

07

## 6 தமிழ் பேசும் கட்சிகள் நாளை இந்தியத் தூதுவருடனும் சந்திப்பு

கொழும்பு, ஒக. 03

தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தீர்மானித்துள்ள 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நாளை செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக்

07

## மனித உரிமை ஆணைக்குழு மஹர சிறைக்குச் சென்றது!

கொழும்பு, ஒக. 03

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று பேர் கொண்ட குழுவொன்று நேற்று மஹர சிறைச்சாலைக்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற விதம், அதற்கான காரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய

07


## இலங்கை வருகிறார் இந்திய வெளியுறவு செயலாளர்

கொழும்பு, ஒக. 03

இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்த வாரம் நாட்டுக்கு வருகை தரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

07

## யாழ். படைத் தளபதிக்கு மகஜர்!




யாழ்ப்பாணம், ஒக. 03

வசாவிளான் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு மகஜரை கையளித்துள்ளனர்.

வசாவிளான் பகுதியில் தமது

07

## மஹர சிறைச்சாலையில் இருந்து 104 கைதிகள் வேறு சிறைகளுக்கு!

கொழும்பு, ஒக. 03

மஹர சிறைச்சாலையைச் சேர்ந்த 104 கைதிகள் தும்பறை, வெலிக்கடை, பூஸா, களுத்துறை, பதுளை, மட்டக்களப்பு மற்றும் பொலனறுவை ஆகிய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், குறித்த கைதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் மஹர சிறைச்சாலையின் வீதித் தடைக்கு அருகில்

07

## பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை 6 ஆண்டுகளாக வரையறுக்கத் திட்டம்!

கொழும்பு, ஒக. 03

அரசாங்கம், பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை அதிகபட்சமாக ஆறு ஆண்டுகள் வரையறுக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அனைத்து நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் நோக்கில், அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ள திருத்தங்களின் ஒரு பகுதியாக இது அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பதவிக்கு அதிகபட்சமாக ஆறு ஆண்டுகள் பதவிக்காலத்தை நிர்ணயிக்கும் இந்த நடவடிக்கையினால், ஓய்வு பெறும் வயதை எட்டாவிட்டாலும் கூட, பிரதம நீதியரசர் ஆறு ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்த பின்னர் பதவி விலக வேண்டும்.

முன்மொழியப்பட்ட

07

## நீதிபதிகள் ஓய்வு வயது அதிகரிப்பு அரசமைப்புக்கு முரணானது அல்ல!

### சான்றிதழ் வழங்கினார் சட்டமா அதிபர்



கொழும்பு, ஒக. 03

நீதித்துறையில் பணியாற்றும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை இரண்டு ஆண்டுகளால் அதிகரிக்கும் யோசனை, அரசியலமைப்புக்கு இணங்க இருப்பதாக சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க சான்றிதழ் வழங்கியுள்ளார்.

அந்தச் சான்றிதழ் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்ட வரைவாளருக்கு அனுப்பி

07




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# மஹர சிறைச்சாலை மோதல் துரித விசாரணைகள் ஆரம்பம்!

### சேத விவரங்களை வெளியிட்டது அரசு

கொழும்பு, ஒக. 03

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட பதற்ற நிலைமை தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இக்கலவரத்தின் போது சிறைக்கைதிகளால் மஹர சிறைச்சாலையின் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் குறித்தும் அவர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

அதன்படி, சிறைச்சாலையின் சமையலறை , புனர்வாழ்வுக் கட்டடம், புனர்வாழ்வு அலுவலகம், தலைமைச் சிறைக் காவலர் அலுவலகம் மற்றும் சிறைச்சாலை வைத்தியசாலை போன்ற பகுதிகள் சேதமடைந்துள்ளதுடன் முற்றிலும் நாசமாகியுள்ளன.

இதேவேளை, குறித்த அமைதியின்மைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என்றும், அது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலையில் மஹர சிறைச்சாலை வளாகத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தற்போது முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதற்கமைய, சிறைச்சாலைக்குள் தற்போது அமைதியான சூழல் நிலவுவதால், கைதிகளின் உறவினர்கள் அமைதியான முறையில் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு ஏ.சி. கஜநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## 5 ஆம் தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளுக்கு தடை!

கொழும்பு, ஒக. 03

2026ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு நடத்தப்படும் மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்கு எதிர்வரும் 05ஆம் திகதி நள்ளிரவு முதல் முழுமையான தடை விதிக்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக நிறைவடையும் வரை இத்தடை அமுலில் இருக்கும் எனத் தெரவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புகள், பாடநெறி விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

"பரீட்சை வினாக்களுக்குச் சமமான வினாக்கள் வழங்கப்படும்" எனக் கூறி சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்வதும், அத்தகைய பொருட்களைத் தம்வசம் வைப்பதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 09ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டிருக்கும் 2,723 பரீட்சை நிலையங்களில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மடு அன்னை திருவிழா குறித்து கலந்துரையாடல்

மன்னார், ஒக. 03

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடு அன்னையின் ஆவணித் திருவிழா தொடர்பாக விசேட முதலாவது கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி. கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார் மற்றும் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே. பெப்பி சோசை அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திணைக்கள தலைவர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், தவிசாளர்கள்,திணைக்கள தலைவர்கள்,கடற்படை, இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள் ,வைத்தியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம் பெற்று 14 ஆம் திகதி மாலை நற்கருணை ஆராதனையும் அதனை தொடர்ந்து 15 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது.

இந்த நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் ஆவணி திருவிழாவிற்கு வருகை தர உள்ளதோடு, எதிர்வரும் மடு அன்னையின் திருவிழா காலப்பகுதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை என்பதினாலும் இம்முறை பல இலட்சக்கணக்கான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தர உள்ளார்கள் என்பதன் அடிப்படையில் அனைத்து வித ஏற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. (அ)

# சட்டத்தின் பிடியில் யாரும் தப்பமுடியாது கோட்டாவும் தயாராக இருக்கவேண்டும்!

### சமீர பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்து சட்ட நடவடிக்கைகளுக்குத் தயாராக இருக்க வேண்டும். தொடர் கைது நடவடிக்கைகளின் வரிசையில் இன்னும் பலர் உள்ளதாக இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் எதிராகத் பாரபட்சமின்றிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடமை தவறியமை மற்றும் சதித் திட்டத்துக்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அரச அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் பிரதானிகள் மற்றும் அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் பொறுப்புக் கூற வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பொறுப்பில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷ, அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன, பிரதான புலனாய்வு அதிகாரி சுரேஷ் சாலே, தேசபந்து தென்னக்கோன் மற்றும் ஆசாத் மௌலானா உள்ளிட்ட எந்தவொரு தரப்பும் தப்பித்துக்கொள்ள முடியாது.

கடந்த வாரம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம், தமது கடமையைத் தவறும், திட்டமிட்டோ அல்லது திட்டமிடாமலோ சதித்திட்டம் ஒன்றுக்குத் துணையாகச் செயற்படும் எந்தவொரு அரச அதிகாரிக்கும் கிடைக்கும் அதிகபட்ச தண்டனை என்னவென்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நீதிமன்றத் தீர்ப்பை நாங்கள் கௌரவிக்கின்றோம்.-என்றார். (அ)

## பிரதி அமைச்சரைப் போன்று நடித்து மக்களை ஏமாற்றும் மோசடியாளர்கள்!

கொழும்பு, ஒக. 03

தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க வைப்போல் போலியாக நடித்து, மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நபர்கள் குறித்து பிரதி அமைச்சரின் அலுவலகம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் அறிவித்தல் ஒன்றின்படி, நபர் ஒருவர் அல்லது குழுவினர் பிரதி அமைச்சர் எனத் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பணம் கோருவதாகவும் மற்றும் பிற மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் புகார்கள் வந்துள்ளன.

அத்தகைய நபர்களுக்கு எவ்விதப் பணத்தையோ, தனிப்பட்ட தகவல்களையோ அல்லது ஆவணங்களையோ வழங்க வேண்டாம் எனப் பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான தொலைபேசி அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் ஏதேனும் வந்தால், உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

## சீனப் பிரஜை கைது!

கொழும்பு, ஒக. 03

சட்டவிரோதமாக நாட்டுக்குள் வெளிநாட்டுத் தயாரிப்புச் சிகரெட்டுகளை கடத்த முயன்ற சீனப் பிரஜை ஒருவர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 40 வயதுடைய சீனாவைச் சேர்ந்த வர்த்தகர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து சுமார் 59 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 39 ஆயிரத்து 400 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 197 சிகரெட் பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சந்தேக நபரை கைது செய்துள்ள கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைக முன்னெடுத்துள்ளனர். (அ)

## மஹர சிறைச்சாலையில் மோதல் கட்டுப்பாட்டுக்குள்!

கொழும்பு, ஒக. 03

மஹர சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையில் நேற்று இரவு ஏற்பட்ட மோதல் தற்போது முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 6 கைதிகள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வெலிசறை நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனிடையே, சட்டம் மற்றும் ஒழுங்கை பேணும் நோக்கில் மஹர சிறைச்சாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளன. அப்பகுதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்கு சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அவசியமற்ற வகையில் பொது இடங்களில் ஒன்றுகூடுவதை பொதுமக்கள் தவிர்க்குமாறும், அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்கூட்டியே அறிவித்து தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
03.08.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், ஆடி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வீதி விபத்து மரணங்களுக்கு உணர்ச்சியற்றதாக இலங்கைச் சமூகம்

வீதி விபத்துக்கள் இன்று அச்சுறுத்தும் வகையில் தொடர்ச்சியாக உயிர்களை பலியெடுத்து வருகின்றன. இலங்கையில் தற்போது தினமும் சராசரியாக ஏழு பேர் உயிரிழக்கிறார்கள். இந்த போக்கு பல வருடங்களாக தொடருகிறது.

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூலை ஐந்தாம் திகதிவரை மொத்தம் 1,355 வீதி விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் அவற்றில் 1,424 பேர் பலியாகியதாகவும் போக்குவரத்து பொலிஸ் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்ததாக நேற்றைய தினம் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற உயிர்களைப் பலியெடுத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கையை விடவும் இது நூறு அதிகமாகும். அண்மைக்காலமாக வீதி விபத்துக்களில் அச்சந்தரும் அதிகரிப்பை இது காட்டுகிறது.

பாதசாரிகளும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுமே வீதி விபத்துக்களில் மிகவும் பெருமளவுக்கு பாதிக்கப்படும் பிரிவினராக இருக்கிறார்கள். இவ்வருடம் இதுவரையில் விபத்துக்களில் 484 பாதசாரிகளும் 488 மோட்டார் சைக்கள் ஓட்டிகளும் பலியாகியுள்ளனர்.

2020 - 2024 காலப்பகுதியில் 118, 697 வீதி விபத்துக்கள் இடம்பெற்றதாக பொலிஸ் பதிவுகள் மூலம் தெரிய வருகிறது.இவற்றில் 12, 322 பேர் உயிரிழந்தனர். அதாவது வருடத்துக்கு சராசரியாக 2,464 பேர் பலியாகினர்.

2025ஆம் ஆண்டில் மாத்திரம் உயிரிழப்புக்களை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை 2,583 ஆக உயர்ந்ததாகவும் அவற்றில் 2,732 பேர் உயிரிழந்ததாகவும் பொலிஸ் பதிவுகள் கூறுகின்றன. இவற்றில் பாதசாரிகளும் மோட்டார் சைக்கள் ஓட்டாகளுமே அதிகம் பாதிக்கப்பட்டனர்.

துயருறும் குடும்பங்களைத் தவிர, இந்த கொடிய விபத்துக்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் கவலையையோ கொந்தளிப்பையே காணவில்லை. ஆனாலும், வீதி விபத்துக்களின் அளவு மலைக்க வைக்கிறது.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஆயிரக்கணக்கில் உயிர்களைப் பலிகொண்ட போரின் வடுவை இலங்கை அனுபவித்தது. தினசரி மரணம் மற்றம் காயம் பற்றிய செய்திகள் மிகவும் சாதாரணமான ஒன்றாக மாறியதால், ஒரு சமூகமாக இலங்கை மனித உயிர்களின் இழப்புகளுக்கு படிப்படியாக உணர்ச்சியற்ற நிலையை அடைந்தது.

போர் முடிவுக்கு வந்து நீண்டகாலம் கடந்த நிலையிலும் அந்த உணர்ச்சியற்ற தன்மை வேறு ஒரு வடிவில் தொடருகிறது போன்று தெரிகிறது. இன்று வீதி விபத்துக்கள் அச்சுறுத்தும் வகையில் தொடர்ச்சியாக உயிர்களைப் பலியெடுத்து வருகின்ற போதிலும், அவை பொதுமக்கள் அல்லது அதிகாரிகளிடமிருந்து பெரிய அளவிலான அவசரக் கவனிப்பை பெறுவதாக இல்லை.

பல வருடங்களாக தொடரும் இந்த அதிக உயிரிழப்பு புள்ளி விபரங்கள் துரதிர்ஷ்டவசமான போக்கு மாத்திரமல்ல, வீதி விபத்துக்களுக்கான மூலக் காரணங்களை உறுதியுடனும் நிலையான தன்மையுடனும் கையாளுவதற்கு அரசாங்கங்கள் தவறியமையையும் வெளிக்காட்டுகிறது.

# இந்தியா சீனாவிடம் சரணடையக் கூடாது; அமெரிக்காவைச் சார்ந்திருக்கக் கூடாது


சசி தரூர்

*வாஷிங்டனில் நிலவும் நிலையற்ற அரசியல் சூழல், புதுடில்லியில் உத்தி ரீதியான கவலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் பரிவர்த்தனை சார்ந்த, சீரற்ற கொள்கை மாற்றங்களால் இந்தியா பாதிக்கப்பட்டது.*

*எஃகு மற்றும் அலுமினியத்தின் மீது கடுமையான வரிகளை விதித்தது, இந்தியாவின் முன்னுரிமை வர்த்தக அந்தஸ்தைப் பறித்தது, இஸ்லாமாபாத்துடனான உறவை தீவிரமாகப் புதுப்பித்தது, மேலும் எச் -1 பி விசா விதிகளைக் கட்டுப்படுத்தியது போன்ற நடவடிக்கைகள் இதற்குச் சான்றாகும்.*

*இதனால், இந்தியாவின் சீனாக் கொள்கையில் அடிப்படை மாற்றம் தேவை என்று உள்நாட்டில் குரல்கள் வலுத்து வருகின்றன.*

### பொருளாதாரக் காரணியும், தவறான பார்வையும்

*ஒரு சக்திவாய்ந்த வணிகக் குழுவால் முன்வைக்கப்படும் இந்த வாதம், பெய்ஜிங்கிற்கு எதிரான இந்தியாவின் மோதல் போக்கு, இந்தியாவின் தேசிய நலன்களை விட வாஷிங்டனின் “சீனாவை முடக்கும்” உத்திக்கு ஏற்ப அதிகமாக ஒத்திசைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. இந்திய தொழில் நுட்பம், விநியோகச் சங்கிலி, தொழில்முறை மூலப்பொருட்கள் மற்றும் மூலதனத்திற்கு சீனா மீது இன்னும் பெரிதும் சார்ந்து இருப்பதால், கடுமையான சீனா-எதிர்ப்பு நிலைப்பாடு உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை முடக்குகிறது.*

*ஆனால் அது பெய்ஜிங்கின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிப்பதில்லை.*

*வாஷிங்டன் எந்த நேரத்திலும் தனது நிலையை மாற்றிக் கொள்ளக்கூடும் - ஒரு நாள் பதற்றத்தை அதிகரித்து, மறுநாள் இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது - இது இந்தியாவை சீனாவின் பழிவாங்கலுக்கு ஆளாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது என்று விமர்சகர்கள் எச்சரிக்கின்றனர்.*

*ஒரு கணிக்க முடியாத வாஷிங்டனுக்கு இந்தியாவின் நலன்களைப் பலிகொடுக்கக் கூடாது என்ற எச்சரிக்கை முற்றிலும் சரியானதே என்றாலும், அதுதான் தற்போது நடக்கிறது என்பதில் தெளிவில்லை. எது எப்படியோ, முன்மொழியப்படும் மாற்று வழி (சீனாவுடனான அவசரமான, பரஸ்பரமற்ற பொருளாதார உறவு) மிகவும் ஆபத்தானது. இது குறுகிய கால வணிக வசதிக்காக நீண்ட கால தேசிய பாதுகாப்பை தவறாகப் புரிந்து கொள்வதாகும்.*

*பெய்ஜிங்கிடம் முன்கூட்டியே சரணடைவது, கடந்த பத்தாண்டுகால காரணமற்ற சீனாப் பகையை புறக்கணிப்பதாகும். மேலும், பனிப் போருக்குப் பிந்தைய உலகளாவிய ஒழுங்கு மிகவும் கொந்தளிப்பான கட்டத்தில் நுழையும் வேளையில், இது இந்தியாவின் மீதான சார்புநிலையை அதிகரிப்பதோடு, இந்தியாவின் பேரம் பேசும் சக்தியையும் பறித்து விடும்.*

*உண்மையைச் சொல்வதானால், சீன உறவைச் சீரமைப்பதற்கான முதன்மை உள்நாட்டு காரணி, குறுகிய கால நிதியறிக்கையில் மட்டுமே கவனம் செலுத்தும் ஒரு செல்வாக்குமிக்க வணிகக் குழுவாகும். பல ஆண்டுகளாக, இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின் சில பகுதிகள், மலிவான சீன மூலதனம், இயந்திரங்கள் மற்றும் செயலில் உள்ள மருந்தியல் மூலப்பொருட்களைப் பெறுவது இந்தியாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று வாதிட்டு வருகின்றன.*

*இருப்பினும், இந்த பார்வை கடுமையான உத்தி ரீதியான குருட்டுத்தனத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச வர்த்தகத்தை ஒரு அரசியல்சாரா பரிவர்த்தனையாகக் கருதுகிறது, மேலும் இது விரிவான தேசிய அதிகாரத்தின் யதார்த்தங்களிலிருந்து முற்றிலும் விலகியுள்ளது.*

*2020-க்கு முந்தைய நிலைக்குத் திரும்புமாறு வாதிடுவதன் மூலம், இந்த பொருளாதாரக் காரணிகள் மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாண்டுகால இடைவிடாத, காரணமற்ற ஆக்கிரமிப்பைத் வேண்டுமென்றே மறக்க முனைகின்றன. இந்திய இறையாண்மைக்கு எதிரான பெய்ஜிங்கின் விரோதச் செயல்களின் பட்டியல் உதிரியான எல்லை மோதல்கள் அல்ல அது இந்தியாவை முடக்குவதற்கான ஒரு ஒருங்கிணைந்த உத்தியாகும்.*

*“வாஷிங்டன் ஒரு நம்பகமான பங்களிப்பாளர் அல்ல என்பதற்காக இந்தியா ஒரு விரோதமான அண்டை நாட்டின் கைகளில் போய் விழ வேண்டும் என்று அர்த்தமல்ல.”*

*2013 ஆம் ஆண்டில் டெப்சாங், 2014ஆம் ஆண்டில் சுமர், 2017 ஆம் ஆண்டில் தோக்லாம், பின்னர் கல்வான் பள்ளத்தாக்கில் (2020) ஏற்பட்ட உயிரிழப்புகள் முதல், சீனா “சலாமி-ஸ்லைசிங்” (சிறுகச் சிறுக ஆக்கிரமிக்கும்) தந்திரங்கள் மூலம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மாற்றியமைக்க திட்டமிட்ட முறையில் முயன்றுள்ளது. எல்லை அமைதி ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக மீறி வருகிறது.*

*அருணாச்சலப் பிரதேச மாநிலம் முழுவதற்கும் பெய்ஜிங் தொடர்ந்து உரிமை கோரி வருகிறது, கட்டுப்படுத்தாத இடங்களின் புவியியல் பெயர்களை மாற்றுகிறது, மேலும் ஜம்மு-காஷ்மீர் மற்றும் அருணாச்சலப் பிரதேசவாசிகளுக்கு “ஸ்டேபிள் விசா” வழங்கி இந்தியாவின் உள்நாட்டுப் புவியியலை ஆயுதமாக்குகிறது.*

*மேலும், பொருளாதார அச்சுறுத்தலும் உள்ளது. சீனா தனது உற்பத்தி ஆதிக்கத்தை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி, இருதரப்பு தகராறுகளின் போது முக்கியமான இயந்திரங்கள் மற்றும் தொழிற்துறை உதிரிபாகங்களை சட்டென்று நிறுத்தி வைக்கிறது. அரிதான மண் கனிமங்கள் (Rare Earths) மற்றும் சுரங்கம் தோண்டும் இயந்திரங்களில் தமக்குள்ள ஏகபோக உரிமையை ஆயுதமாக்குகிறது.*

*அனைத்திற்கும் மேலாக, 2025 மே மாதம் நடைபெற்ற “ஆப்பரேஷன் சிந்தூர்” நடவடிக்கையின் போது, பாகிஸ்தானுக்கு சீனா வழங்கிய பகிரங்கமான, ஒருங்கிணைந்த இராணுவ ஆதரவு மிகவும் கவலையளிக்கிறது. இஸ்லாமாபாத்திற்கு நிகழ்நேர உத்தி ரீதியான செயற்கைக்கோள் தகவல்கள் மற்றும் உளவுத் தகவல்களை வழங்கியதன் மூலம், சீனா வெறும் இராணுவப் பொருட்கள் விநியோகிப்பாளரிலிருந்து இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான தீவிர விரோதப் பங்காளியாக மாறியுள்ளது.*

*மலிவான உதிரிபாகங்களைப் பெறுவதற்காக இந்த வரலாற்றைப் புறக்கணிப்பது நடைமுறைச் சாத்தியக்கூறு அல்ல. அது உத்தி ரீதியான குருட்டுத்தனமாகும்.*

### பரஸ்பர நன்மை என்ற கட்டுக்கதை

*உறவுகளை விரைவாகச் சீரமைப்பதற்கான வாதத்தில் உள்ள முதன்மைத் தவறு என்னவென்றால், இந்தியா தனது பொருளாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினால், சீனா புவிசார் அரசியல் நற்பெயரால் பதிலளிக்கும் என்ற அறியாமையான அனுமானமாகும். ஆசியாவில் சீன வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைத் தத்துவம், ஒற்றை துருவக் கண்டத்தை உருவாக்குவதாகும். பெய்ஜிங் புதுடில்லியை ஒரு சமமான சக்தியாகப் பார்க்கவில்லை, இந்தியா அவ்வாறு மாறுவதையும் அது விரும்பவில்லை.*

*பத்தாண்டுகளுக்கும் மேலாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாத அமைப்புகளை சர்வதேசத் தடைகளிலிருந்து பாதுகாக்கவும் கண்டனங்களிலிருந்து தப்பிக்க வைக்கவும் சீனா தனது “வீட்டோ” அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.*

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**இடபம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**விருச்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். நன்மை கிடைக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன், மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

# வடக்கு மாகாணத்தில் நான்கு மாதங்களில் 7606 நாய்களுக்கு கருத்தடை செய்ய இலக்கு

யாழ்ப்பாணம், ஒக. 03

வடக்கு மாகாணத்தில் வீதியோரங்களில் பெருகிவரும் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுக்குத் தீர்வு காணும் நோக் கில் முன்னெடுக்கப்பட்ட விசேட கருத்தடைச் செயற் றிட்டத்தில் இந்த ஆண்டு 7,606 நாய்களுக்குக் கருத்தடை சிகிச்சை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழான கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும், உள்ளூராட்சி அமைச்சின் கீழான உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக இந்த ஆண்டு 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதுடன், மாவட்ட ரீதியாகப் பின்வரும் எண்ணிக்கையான நாய்களுக்குக் கருத் தடை செய்யப்படவுள்ளது.

யாழ். மாநகர சபை - 120 நாய்கள் ஏனைய யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகள் - 5,216 நாய்கள் கிளிநொச்சி மாவட்டம் (கரைச்சி தவிர்ந்த) - 350 நாய்கள் முல்லைத்தீவு மாவட்டம் - 750 நாய்கள்,வவுனியா மாவட்டம் (மாநகர சபை உள்ளடங்கலாக) - 1,170 நாய்கள் இச்செயற்றிட் டத்தின் முதற் கட்டமாக, வவு னியா மாவட்டத்தில் இதுவரை 72 நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவுறுத்தப்பட் டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாண மாநகர சபையிலும், நாளை செவ்வாய்க்கிழமை முல்லைத் தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையிலும், எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியா மாநகர சபையிலும் இத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

அமைச்சரவை மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய “விலங்கு நலச் சட்டத்தின்“ ஏற்பாடுகளுக்கு அமைவாக, விலங்குகளின் உரிமைகள் மற்றும் நலன்களுக்கு அதியுயர் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

விலங்குகளின் நலனைக் காப்பதன் ஊடாக ஆரோக்கியமானதொரு சமூகத்தை உருவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்துக்கு, அனைத்துப் பொதுமக்களும் உரிய தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநா யகன் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் 3 ஆண்டுகளாக கடவுச்சீட்டு புகைப்படக் கலையக சேவை செயலிழப்பு!

## உடனடி நடவடிக்கை கோரி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு ரவிகரன் எம்.பி. கடிதம்

முல்லைத்தீவு, ஒக. 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு புகைப்படக் கலையக சேவை கடந்த மூன்று ஆண்டுகளாக முற்றாக செயலிழந்துள்ள நிலையில், மக்களின் அத்தியாவசிய சேவைத் தேவையை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள விரிவான கடிதத்தில், இலங்கை முழுவதும் 1,420 அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டு புகைப்படக் கலையகங்கள் இயங்கும் நிலையில், புவியியல் ரீதியாக பரந்த பரப்பைக் கொண்ட ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரே ஒரு அங்கீகரிக்கப்பட்ட கலையகம் மட்டுமே இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அந்த ஒரே ஒரு அங்கீகரிக்கப்பட்ட கலையகம் கூட கடந்த மூன்று ஆண்டுகளாக சேவையாற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது, மாவட்ட மக்களை முற்றாக இச்சேவையிலிருந்து விலக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கலையகத்தின் உரிமையாளர் கடந்த மூன்று ஆண்டுகளாக திணைக்களத் துக்கு பல முறை மின்னஞ்சல் மூலம் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உதவிகளை கோரி விண்ணப்பித்தும், இதுவரை உரிய தீர்வு வழங்கப்பட வில்லை என தகவல் கிடைத்துள்ளதாகவும், இதன் விளைவாக கலையகத்தின் அங்கீகரிக் கப்பட்ட சேவையை மீள ஆரம்பிக்க முடியாமல் உள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு விண்ணப்பத்துக்குத் தேவையான இலத்திரனியல் புகைப்படம் அங்கீகரிக்கப்பட்ட கலையகங்கள் ஊடாக மட்டுமே திணைக்களத்தின் கணினி முறைமைக்கு அனுப்பப்பட வேண்டியிருப்பதால், முல்லைத்தீவு மக்கள் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப் பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு பயணிக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், இதனால் கூடுதல் பயணச் செலவு, கால விரயம் மற்றும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, குறைந்த வருமானக் குடும்பங்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தொலைதூர கிராமங்களில் வாழும் மக்கள் இந்த நிலைமையால் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, கடந்த மூன்று ஆண்டுகளாக முன்வைக்கப் பட்டுள்ள கோரிக்கைகளை உடனடியாக பரிசீலித்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அந்த ஒரே ஒரு அங்கீகரிக்கப்பட்ட சேவையை மீள ஆரம்பிக்க தேவையான தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உதவிகளை வழங்குமாறும், மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் குறைந்தபட்சம் ஒரு அங்கீகரிக்கப் பட்ட கடவுச்சீட்டு புகைப்படக் கலையகமாவது இயங்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக திணைக்களம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து தனது அலுவலகத்திற்கு விரைவாக அறிவிக்குமாறும் ரவிகரன் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# மடு விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

மன்னார், ஒக. 03

மன்னார் மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடுத் திருத் தல பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் 06 ஆம் திகதி மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தற்போது மடுத் திருத்தலத்தில் தங்கியுள்ளனர்.

மடுத் திருத்தலத்துக்கு சென்று தங்கியிருந்த முத்தரிப் புத்துறையை சேர்ந்த 18 வயதுடைய அந்தோனி ஜெரோம் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மடு ரோட் சந்தி - பள்ளமடு சந்தி வீதியில் மடுத்திருத்தலப் பகுதியில் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்று கொண்டிருந்தபோது வீதித் தடையை கடக்க முற்பட்டவேளை மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தூக்கி எறியப்பட்டதில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கவேண்டும்!

### கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அனைவரும் மதிக்க வேண்டும் என்றும், அந்தத் தீர்ப்புக்கு தலைவணங்குவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் இன்னும் இருக்கக்கூடும் என்றும், அந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார் என்ற கேள்வி இதுவரையும் பதிலின்றி தொடர்கின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் முஸ்லிம் சமூகத்திற்கும், கத்தோலிக்க சமூகத்திற்கும் மட்டுமன்றி முழு நாட்டுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த தாக்குதல் தொடர்பில் முழுமையான மற்றும் சுயாதீனமான விசாரணை முன்னெடுக் கப்பட்டு, உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும், அதற்கமைய நீதியும் உரிய தீர்வும் வழங்கப்பட வேண்டும் என்றும் கபீர் காசிம் வலியுறுத்தியுள்ளார். (அ)

# சிறைச்சாலை மோதல்களுக்கு அரசின் அலட்சியமே காரணம்!

### நாமல் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 03

நாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் சிறைச்சாலை மோதல்கள் தொடர்பாக, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

சில வார இடைவெளியில் இடம்பெற்ற இரண்டாவது பெரிய சிறைச்சாலை மோதல் இதுவென சுட்டிக்காட்டியுள்ள அவர், இது தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமல்ல என்றும், மோசமான நிர்வாகம், அலட்சியம் மற்றும் சீரழிந்து வரும் சிறைச்சாலை அமைப்பின் வெளிப்பாடு என்றும் விமர்சித்துள்ளார்.

சிறைச்சாலைத் துறை பெரும் நெருக்கடியைச் சந்தித்து வரும் நிலையிலும், இதுவரை நிரந்தர ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப் படாதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதுகாப்பை அதிகரிப்பது தற்காலிகத் தீர்வாக மட்டுமே அமையும் எனத் தெரிவித்துள்ள அவர், அதிகளவிலான கைதிகள், போதிய வசதியின்மை, சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் புனர்வாழ்வு திட்டமின்மை ஆகிய அடிப்படைப் பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சிறைத்தண்டனை ஒரு நபரின் சுதந்திரத்தைப் பறிக்கிறதே தவிர, அவர்களின் கணணியத்தை அல்ல எனக் குறிப்பிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ, தற்காலிக நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, சீரழிந்து வரும் சிறைச்சாலை அமைப்பைச் சீரமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## நாட்டில் நிலவும் கடும் வறட்சி நிலை: நீரைக் சிக்கனமாகப் பயன்படுத்துக!

கொழும்பு, ஓக. 03

நாட்டின் பல பகுதிகளில் வெப்பமான மற்றும் வறட்சியான வானிலை நீடித்து வருவரால், பொதுமக்களை நீரைக் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கோரியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய நீரியல் மற்றும் பேரிடர் முகாமைத்துவ பணிப்பாளர் எல்.எஸ்.சூரியபண்டார, நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்கனவே கடுமையான நீர் பற்றாக்குறை பதிவாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டின் பிரதான 73 நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் தற்போது சுமார் 40வீத நீர் மட்டுமே எஞ்சியுள்ளது.

எதிர்வரும் எல் நினோ காலநிலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் ஆவியாகும் வீதம் அதிரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், மழைபெய்யும் வரை நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய ஆதாரங்களில் உள்ள நீரை வீணாக்காமல் மிகவும் கவனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களை நீரியல் மற்றும் பேரிடர் முகாமைத்துவ பணிப்பாளர் எல்.எஸ்.சூரியபண்டார வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடை யில்,வளிமண்டலவியல் திணைக்களத்துடன் இணைந்து எல் நினோ நிலையை எதிர்கொள்ள ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதாக நீர் முகாமைத்துவ செயலகத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

எல் நினோ என்பது மழை முற்றிலும் பெய்யாது என்பதைக் குறிக்காது. மாறாக மழைவீழ்ச்சி முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

அத்துடன், வெப்பநிலை உயர்வால் ஆவியாதல் வீதம் அதிகரிக்கும் என்பதால் நீர் முகாமைத்துவம் மிக முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பெரும் போகப் பயிர்ச்செய்கையை எதிர்வரும் ஒக்ரோபர் 1 முதல் 15 ஆம் திகதிக்குள் ஆரம்பிக் குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாசன அமைப்புகள் மற்றும் விவசாய மண்டலங்கள் முழுவதும் ஒரே நேரத்தில் பயிர்ச்செய்கையைத் தொடங்குவது கணிசமான அளவு நீரைச் சேமிக்க உதவும் என்ற நோக்கத்திலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வறட்சியான வானிலையைச் சமாளிக்கக் குடிதண்ணீர் மற்றும் மின்சார விரையத்தைக் குறைக்குமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 03

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 18 வீதத்தால் குறைந்துள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 85 ஆயிரத்து 364 ஆக உயர்ந்துள்ளது.

கம்பஹா, கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் தொடர்ந்து பதிவாகி வருவதாக இதுவரை டெங்கு காரணமாக 62 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

எதிர்வரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தரா தர உயர்தரப் பரீட்சை நடை பெறவுள்ள பரீட்சை நிலை யங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகளில், பரீட்சைகளுக்கு முன்னதாக கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளதாக தேசிய டெங்கு கட டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## எல் நினோ வாசற்படியில் இல்லை வீட்டுக்குள் வர ஆரம்பித்துவிட்டது

### ஐ.நா. பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு



நியூயோர்க், ஓக. 03

எல் நினோ நமது வாசற்படியில் மட்டும் இல்லை, அது வீட்டுக்குள் நுழைந்து வெப்பத்தை அதிகரிக்கத் ஆரம்பித்துவிட்டது என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

வேகமாக தீவிரமடைந்து வரும் எல் நினோ காலநிலை மாற்றம் காரணமாக, எதிர்வரும் மாதங்களில் உலகளவில் கடுமையான வானிலை மாற்றங்கள் மற்றும் தீவிர காலநிலை பாதிப்புகள் ஏற்படக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபையின் வானிலை முகவரகம் எச்சரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வானிலை முகவரகம் வெளியிட்ட தகவலின்படி, இந்த காலநிலை மாற்றம் காரணமாக உலகம் முழுவதும் வெப்ப அலைகள், கடுமையான வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.

ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காட்டுத்தீ தீவிரமடைந்து வருவதுடன், தெற்காசியாவில் பருவமழை பேரழிவை ஏற்படுத்தி வரும் சூழலிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பசுபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்தை விட வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் உலகளாவிய வெப்பநிலை கணிசமாக உயரும்.ஆப்பிரிக்கா, தெற்கு ஐரோப்பா, இந்திய துணைக் கண்டம், கிழக்கு ஆசியா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் கடுமையான வெப்பம் பதிவாகக்கூடும்.

அத்துடன்,இந்த ஆண்டின் பிற்பகுதியில் எல் நினோ உச்சத்தை அடையும் போது, அது புதிய சாதனையை எட்டக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில், "எல் நினோ நமது வாசற்படியில் மட்டும் இல்லை,

அது வீட் டுக்குள் நுழைந்து வெப்பத்தை அதிகரிக்கத் ஆரம்பித்துவிட் டது என்று ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அட்ட னியோ குட்டரஸ் தெரிவித் துள்ளார்.

இது வெறும் ஆரம்பம் மட்டுமே. ஏற்கனவே தகித்துக் கொண்டிருக்கும் ஒரு கிரகத்திற்கு எல் நினோ மேலும் எரியூட்டுகிறது. எனவே காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அனைத்து நாடுகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதேவேளை, முன்னறிவிப்புகள் மட்டும் பேரழிவுகளைத் தடுத்துவிடாது மனிதர்களின் நடவடிக்கைகளே அதைத் தடுக்கும் என்று உலக வானிலை அமைப்பின் பொதுச்செயலாளர் செலஸ்டே சௌலோ தெரிவித்துள்ளார்.

நாம் இன்று எடுக்கும் முடிவுகளே நாளைய பாதிப்புகளை தீர்மானிக்கும்.

எனவே பாதிக்கப்படக் கூடிய மக்களைப் பாதுகாக்க அரசாங்கங்களும் மனிதநேய அமைப்புகளும் உடனடியாக களத்தில் இறங்கி செயல்பட வேண்டும் என்று உலக வானிலை அமைப்பின் பொதுச் செயலாளர் செலஸ்டே சௌலோ வலியுறுத்தியுள்ளார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணி முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும்

### ரஞ்சித் மத்துும பண்டார கோரிக்கை

கொழும்பு, ஓக. 03

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ள போதிலும், இத்தாக்குதலைத் திட்டமிட்டவர்கள், நிதியுதவி செய்தவர்கள் மற்றும் இதன் பின்னணியில் இருந்த உண்மையான குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப் பட வேண்டும். இத்தாக்குத லால் இரு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்கு வங்கியை இழந்து அரசியல் ரீதியாகத் தங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட் டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் இத் தாக்குதலுக்கு ஜே.வி.பி கட்சியுடன் தொடர்புடைய வேட்பாளர் ஒருவர் நிதியுதவி செய்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்பினும், தாக்குதலுக்கு நிதியுதவி செய்த இப்ரா ஹிம் உள்ளிட்ட முக்கிய குற்ற வாளிகள் மற்றும் இதன் பின்னணியில் இருந்து பயனடைந்தவர்கள் மீது ஏன்இதுவரை முழுமையான நடவடிக்கை எடுக்கப் படவில்லை? இத்தாக்குதலில் கத்தோலிக்க மக்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளனர். முஸ்லிம் மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டனர். அதேபோல, 2019 மற்றும் 2024 ஆகிய இரு ஜனாதிபதித் தேர்தல் களிலும் தேசிய பாதுகாப்பு என்ற விவகாரத்தை மையப்படுத்தித் எங்களின் வாக்குகள் பெருமள வில் கைநழுவிச் சென்றதால், அரசியல் ரீதியாகத் எங்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுத் ஒரு பாதிக் கப்பட்ட தரப்பாகவே இருக் கின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பஸ்களுக்கு மண்ணெண்ணெய் நிரப்பினால் கடும் நடவடிக்கை!

## பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிரடி உத்தரவு

கொழும்பு, ஒக. 03


இலங்கையில் பயணிகள் பஸ்களில் டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுவது தொடர்பாக தொடர்பாக பல்வேறு பகுதிகளில் இலங்கை பொலிஸ் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

டீசலுக்குப் பதிலாக சட்ட விரோதமாக மண்ணெண்ணெய் பயன்படுத்தி இயக்கப்படும் பஸ்கள் குறித்து பொதுமக்கள் அளித்த முறைப்பாடுகளை அடுத்து நாடு தழுவிய அளவில் பொலிஸார் இவ் விசேட சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது மண்ணெண்ணெயில் இயக்கப்பட்ட சுமார் 100 பயணிகள் பஸ்கள் அடையாளம் காணப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சந்தேகத்திற்குரிய மேலும் பல பஸ்களிலிருந்து எரிபொருள் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வகப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

டீசல் லீற்றர் ஒன்றின் விலையை விட மண்ணெண்ணெயின் விலை குறைவாக இருப்பதால் கூடுதல் இலாபத்திற்காகப் பல பேருந்து உரிமையாளர்கள் சாரதிகள் டீசலுடன் மண்ணெண்ணெயைக் கலந்து பயன்படுத்துகின்றனர். இந்த சட்டவிரோதச் செயலால் பேருந்துகளின் எஞ்சின்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடு தீவிர காற்று மாசுபாடும் ஏற்படுகிறது. இலாப நோக்கம் இருந்தாலும் சுற்று சூழல் மாசடைவதுடன் வாகனத்தின் இயந்திரப் பாதிப்பும் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றது.




அத்துடன் கொள்கலன்களில் சாதாரண அளவுக்கு அதிகமாக மண்ணெண்ணெய் வாங்குபவர்கள் குறித்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் பஸ்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கவோ அல்லது பயன்படுத்தவோ துணை போகக் கூடாது என பொலிஸ் போக்குவரத்து பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

அண்மையில் கல்முனை தலைமையக பொலிஸாரால் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் மண்ணெண்ணெயில் இயக்கப்பட்ட 3 பயணிகள் பஸ்கள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இடிந்து விழும் நிலையில் வகுப்பறை கண்டு கொள்ளாத கல்வி அதிகாரிகள்



திருமலை, ஒக. 03

திருகோணமலை மாவட்ட திருகோணமலை வலயக்கல்வி பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடிந்து விழும் நிலையில் வகுப்பறை கட்டடம் காணப்படுவதால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக் கட்டடத்தின் ஒரு பகுதி ஏற்கனவே குடைசாய்ந்து காணப்படுகிறது.

இது குறித்து உரிய கல்வித் துறை சார் உயரதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பெரும் அச்சத்துடனேயே அருகாமையில் உள்ள மாணவர்களும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


குறித்த பாடசாலையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை இங்கு காணப்படுகிறது.

எனவே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலை மாணவர்களின் நலனை கொண்டு குறித்த கட்டடத்தை திருத்தியமைத்தாவது தருமாறும் உரிய தரப்புக்களுக்கு பெற்றார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ)

# மின்னல் தாக்கி வீடு தீப்பிடித்து எரிந்தது!

## உபகரணங்கள் நாசம்



அம்பாறை, ஒக. 03

அம்பாறை இகினியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கந்த கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பெய்த கனமழையின் போது மின்னல் தாக்கியதில் வீடு ஒன்று தீப்பிடித்து முற்றாகச் சேதமடைந்துள்ளது.

மழை பெய்யத் தொடங்கிய வேளையில், வீட்டிலிருந்த இரண்டு பிள்ளைகளும் அருகிலுள்ள வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மின்னல் தாக்கத்தால் வீட்டின் உள்ளே பரவிய தீயைப் பிரதேசவாசிகள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும், வீட்டிலிருந்த அனைத்துப் பொருட்களும் உபகரணங்களும் தீயில் எரிந்து சாம்பலாகின.

(அ)


# மட்டக்களப்பில் சுயதொழில் பயிற்சி நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்கள்

மட்டக்களப்பு, ஒக. 03

தொழில் பயிற்சி நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் தனியார் விடுதியில் நடைபெற்றது.

பெண்களின் சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இலவச ஐசிங் கேக் உற்பத்தி, ஆரிவேக் பயிற்சி, பனையோலை உற்பத்தி பயிற்சி, கணணிப் பயிற்சி, அழகுக்கலைப் பயிற்சி, ஆங்கில மொழிப் பயிற்சி, உள்ளிட்ட கற்கைநெறிகளை சுவிஸ் பொண்டானா பௌண்டேசன் அமைப்பின் அனுசரணையில், அம்மன் மகளிர் இல்ல பவுண்டேசன் அமைப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை, புதூர் கொடுவாமடு, கல்லடி, மட்டக்களப்பு நகர், போன்ற இடங்களில் இப்பயிற்சிகள் நடைபெற்றன.

4 மாதங்களாக நடைபெற்ற இப்பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இதன்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறீநேசன், வைத்தியர் இ.சிறிநாத், பொண்டானா நிறுவனத்தின் பணிப்பாளர் ஆதிரையன், அம்மன் மகளிர் இல்ல பௌண்டேசனின் பணிப்பாளர் வாமதேவர், இணைப்பாளர் ரஞ்ஜித்குமார், ஆலோசகர் கமலதாஸ், என பலர் இதன்போது கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 9400 மாற்றுத் திறனாளிகள்!

மட்டக்களப்பு, ஒக. 03

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9400 மாற்றுத் திறனாளிகள் உள்ளார்கள். அம்மை அப்பன் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தின் கட்டடப் பணிகள் ஆரம்பித்துவிட்டன என தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் பணிப்பாளர் சாரங்கபாணி அருள்மொழி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் மாற்றுதிறனாளர்களுக்காக அமைக்கப்பட்டு வரும் அம்மை அப்பன் இல்லம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவி[illegible] [illegible] கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த இல்லத்தில் 24 அறைகள். ஒவ்வொரு அறைக்கும் தனிக் குளியலறை, மையத்தில் ஒரு மண்டபம், மருத்துவ அறை, அலுவலகம் ஆகியவற்று [illegible] கடற்கரையையும் மைதானத்தையும் இரசிக்கக்கூடிய வகையில் இந்தக் கட்டடம் கட்டப்படுகிறது.

50 மாற்றுத்திறனாளிகள் தமது துன்பமான காலத்தில் இந்த அம்மை அப்பன் இல்லத்திற்கு வந்து தங்கி, தம்மைத் தேற்றிக் கொண்டு, மீண்டும் சமூகத்தோடும் தங்கள் குடும்பத்தோடும் இணையும் வழிவகைகள் இந்த இல்லத்தில் செய்யப்பட்டிருக்கும். அவர்களுக்கான உணவு, மருத்துவ வசதிகள் அனைத்தும் இலவசமாகக் கிடைக்கும் வகையில் இந்த இல்லம் நடத்தப்படும்- என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வல்வை படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவு



யாழ்ப்பாணம், ஒக. 03

வல்வெட்டித்துறை நகரில் தமிழ்த் தேசிய கட்சி, தமிழ்த்தேசியப் பேரவையினரின் ஏற்பாட்டில் வல்வைப் படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

1989.08.02 அன்று இந்திய இராணுவத்தினரால் வல்வெட்டித்துறை பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக் கிச் சூட்டின்போது 72 பொது மக் கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

படுகொலைசெய்யப்பட்ட 72 பொது மக்களினதும் நினைவேந் நல் நிகழ்வில் தமிழ்த் தேசிய கட்சி யின் தலைவர் என். சிறீகாந்தா, தமி ழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட கட்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து பொதுச்சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலித்தனர். (அ)

# மடு யாத்திரை புறப்பட்டபோது வெடி கொளுத்திய இளைஞர் பலி!

## யாழ். ஐந்து மாடிப் பகுதியில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 03

யாழ்ப்பாணத்தில் இருந்து மடு மாதா திருத்தலத்துக்கு யாத்திரை புறப்பட்டபோது கொளுத்தப்பட்ட வெடி வெடித்து குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குருநகர் ஐந்துமாடி குடியிருப்புப் பகுதியை சேர்ந்த செல்வராசா சுஜீபன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குடியிருப்புப் பகுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் மடுமாதா திருத்தலம் நோக்கி யாத்திரை புறப்பட்டது.

யாத்திரை புறப்பாட்டை முன்னிட்டு, பெருமளவான வெடிகள் கொளுத்தப்பட்டன. அதன்போது கொளுத்தப்பட்ட கோர்வை வெடி ஒன்று வெடிக்காத நிலையில், அதனை மீண்டும் கொளுத்த அருகில் குறித்த நபர் சென்றபோது, எதிர்பாராத விதமாக அது வெடி வெடித்ததில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

### வசாவிளான் மக்களும்...

குறித்த பகுதிகள் இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்கள் தமது சொந்த காணிகளுக்கு திரும்ப முடியாத நிலையில் , வாடகை வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்களாக தம்மை தமது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்குமாறு கோரி போராடி வருகின்றனர்.

இந்நிலையில் வலி. வடக்கை சேர்ந்த மூன்று கிராம மக்கள் தமது காணிகளை விடுக்கக் கோரி போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில், மயிலிட்டி கிராம மக்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பலாலி மக்கள் பிரதி ஞாயிற்றுகிழமைகளிலும் போராடி வரும் நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் வசாவிளான் மக்களும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இதுவரையிலான கால பகுதியில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 60 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### ஜனாதிபதி, எதிர்க்கட்சி...

காலந்தாழ்த்தப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துதல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவித்தல் ஆகிய 3 விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் விசேடமாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இவற்றுடன் மலையக தமிழ் மக்களுக்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல், வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்தும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இன்று பி.ப 3.30 மணிக்கு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்திக்கவுள்ள மேற்படி 6 கட்சிகளினதும் பிரதிநிதிகள், அவருடனும் மேற்குறிப்பிட்ட விடயப் பரப்புக்கள் உள்ளடங்கலாக தமிழ்பேசும் மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளனர். (அ)

### பலாலி மக்களும்...

நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வருவதாகவும், தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் கோரி அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

### 6 தமிழ் பேசும்...

கூட்டணி ஆகிய 6 தமிழ்பேசும் கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்தன.

அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்ததன் பிரகாரம் இன்று காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் மாலை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மேற்படி 6 தமிழ்பேசும் கட்சிகளினதும் பிரதிநிதிகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்து, தமது நோக்கம் மற்றும் தாம் விசேட அவதானம் செலுத்தியுள்ள விடயங்கள் பற்றி விரிவாக விளக்கமளிக்கவுள்ளனர். (அ)

### இலங்கை வருகிறார்...

இவ்விஜயத்தின்போது அவர் வெளிவிவகார அமைச்சர் உள்ளடங்கலாக அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளும் தமது சுயாதீனத்துவத்தையும் கொள்கைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் பேணிக்கொண்டு, பொது இணக்கப்பாடு எட்டப்படும் விடயங்களில் தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருக்கும் நிலையில், அக்கட்சிகளின் பிரதிநிதிகளும் கூட்டாக விக்ரம் மிஸ்ரியை சந்திப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

### மனித உரிமை...

விடயங்கள் குறித்து இந்தக் குழு ஆராயவுள்ளது.

இதேவேளை, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் இலங்கை பிரதிநிதிகளும் மஹர சிறைச்சாலைக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டு, சம்பவத்திற்குப் பின்னரான சூழ்நிலைகள் குறித்து மதிப்பீடு செய்துள்ளனர்.

அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் சுபாஸ்ன சுபவிக்கிரம, இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாக இருக்குமா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அங்குள்ள வசதிகள் முற்றாக அழிவடைந்துள்ளதால் கைதிகளைத் தங்க வைப்பதற்கு பொருத்தமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் கைதிகளின் கோரிக்கைகள் அல்லது செயற்பாடுகளின் விளைவாக இடம்பெற்றதா அல்லது வேறு தரப்பினரின் திட்டமிட்ட நடவடிக்கையா என்பது தொடர்பில் கண்டறியப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பாரிய அளவிலான சேதத்தைச் சில நபர்களால் மாத்திரம் ஏற்படுத்த முடியாது எனவும், இதன் பின்னணியில் திட்டமிடப்பட்ட செயற்பாடு இருக்கலாம் என தாம் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள், சம்பவத்திற்கான காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பானவர்களை அடையாளம் காணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

### மஹர சிறைச்சாலை...

காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புனரமைப்புப் பணிகள் காரணமாக மஹர சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடும் நடவடிக்கை இன்று திங்கள் மற்றும் நாளை செவ்வாய்க் கிழமை ஆகிய இரு நாட்களின் பின்னர் ஆரம்பிக்கப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் மஹர சிறைச்சாலையினுள் கைதிகளால் ஏற்படுத்தப்பட்ட பதற்றமான சூழ்நிலை, சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (அ)

### யாழ்.படைத்...

காணிகளை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில், வசாவிளான் பகுதியில் உள்ள இராணுவத்தினர் [illegible] கட்டளைத் தளபதிக்கு தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி மகஜர் கையளித்துள்ளனர்.

அதேவேளை, தமது காணிகளை விடுவிக்குமாறு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை முதல் மதியம் வரை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (அ)

### பிரதம நீதியரசரின்...

திருத்தங்களின்படி, உயர்நீதிமன்ற நீதியரசரின் ஓய்வு பெறும் வயது 65இல் இருந்து 67 ஆகவும், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 63 இல் இருந்து 65 ஆகவும் உயர்த்தப்படும்.

மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதும் இரண்டு ஆண்டுகள் அதிகரிக்கப்படும்.

சட்டமா அதிபரின் ஒப்புதலுக்குப் பின்னர், அடுத்த மாத தொடக்கத்தில் இந்த முன்மொழியப்பட்ட திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மூத்த அரசாங்க வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவுகள் ஏற்கனவே அரசாங்க சட்ட வரைவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படுவதற்கு முன்னர் இந்தச் செயல்முறையை நிறைவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (அ)

### நீதிபதிகள் ஓய்வு...

வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் பணியாற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை இரண்டு ஆண்டுகளால் அதிகரிக்கும் யோசனைக்கு கடந்த ஜூலை 27ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்படி, உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை இரண்டு ஆண்டுகளால் அதிகரிப்பதற்காக அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஏனைய நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதையும் இரண்டு ஆண்டுகளால் அதிகரிப்பதற்காக நீதித்துறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கும் அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சீரற்ற வானிலை காரணமாக 5 கடற்றொழிலாளர்கள் பலி!

## மன்னாரில் ஒருவரை காணவில்லை

கொழும்பு, ஓக. 03

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவரே காணாமல் போயுள்ளதுடன், மற்றொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

அத்துடன், நீர்கொழும்பு - தொடுவாவ பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற படகொன்று நேற்று முன்தினம் கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில், அதில் பயணித்த இருவர் உயிரிழந்ததுடன், அதிலிருந்து மேலும் ஒருவர் வேறொரு படகினால் உயிருடன் மீட்கப்பட்டார்.

இதேவேளை, சிலாபம் - தொடுவாவ பகுதியிலிருந்து கடந்த 31ஆம் திகதி பிற்பகல் கடலுக்குச் சென்று விபத்துக்குள்ளான படகிலிருந்து காணாமல் போன இரு கடற்றொழிலாளர்களில் ஒருவரது சடலம் நேற்று கொள்ளுப்பிட்டிப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

அத்துடன், குறித்த விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய மற்றைய கடற்றொழிலாளர் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# கல்வி என்பது சலுகை அல்ல ஒரு குழந்தையின் உரிமை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஓக. 03

கல்வி என்பது சலுகை அல்ல, ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமை என்பதை உறுதிப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

"நேன இசுர - 2026"புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், மாணவர்கள் எந்தப் பின்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் தரமான கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் மாணவர்கள் உயர் கல்வி அல்லது தொழிற்பயிற்சியை தொடர்வதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

## நீதிபதிகளின் ஓய்வு வயது உயர்வு:

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு பிரான்ஸ் சட்டத்தரணிகள் சபை ஆதரவு!

கொழும்பு, ஓக. 03

இலங்கையில் சேவையிலிருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு, பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் சபை தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்படி, அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ள அதிருப்திகளுக்கு பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் சபை, தனது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தி தீர்மானம் இயற்றியுள்ளது.

பாரிஸில் நடைபெற்ற பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் சபையின் பொதுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சேவையிலிருக்கும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவது, நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் முயற்சியாகப் பொதுமக்களால் பார்க்கப்படலாம் என்றும், இது நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையைக் குலைக்கும் என்றும் பிரான்ஸ் தேசிய சட்டத்தரணிகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சிறைகளின் நிர்வாகத்தையே முன்னெடுக்க முடியாத அரசு!

## சஜித் பிரேமதாஸ சாடல்

கொழும்பு, ஓக. 03

சிறைச்சாலை நிர்வாகத்தையே முறையாக முன்னெடுக்க முடியாத அரசாங்கத்தால் நாட்டை எவ்வாறு நிர்வகிக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு மாளிகாகந்த, பொரளை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய அவர், நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றுடன் நாட்டை முன்னெடுப்பதாக உறுதியளித்த அரசாங்கம், ஆட்சி நிர்வாகத்தின் முக்கிய துறைகளில் தோல்வியடைந்துள்ளதாக குற்றஞ்சாட்டினார்.

வெளிநாட்டு கடன் செலுத்தல் தொடர்பான அண்மைய இணையத் தாக்குதல் சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டியதுடன், அரச நிதியை பாதுகாப்பதில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

கடன் செலுத்தல் நடவடிக்கைகளையும், சிறைச்சாலை நிர்வாகத்தையும் முறையாக கையாள முடியாத அரசாங்கத்தால், நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் எனவும் சஜித் கேள்வி எழுப்பினார்.

நீதித்துறை மற்றும் சிறைச்சாலை அமைச்சர் மீதான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோற்கடித்த சில நாட்களிலேயே மஹர சிறைச்சாலையில் அமைதியின்மை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அப்போது குறித்த அமைச்சரை பாதுகாத்த அரசாங்கம், தற்போது அதே சிறைச்சாலை விவகாரத்தில் மீண்டும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது விவகாரம் பொதுஜன வாக்கெடுப்புக்குச் செல்வோம்!

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 03

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயக ஆட்சியை தமது அரசியல் அடையாளமாக கொண்டு வளர்ந்த மக்கள் விடுதலை முன்னணி தனது பெயரை காக்க விரும்பினால், மக்கள் முன் போகவேண்டும். இது இனி நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை பற்றிய விவாதம் அல்ல. இது நீதித்துறையின் சுயாதீனம், சட்டத்தின் ஆட்சி என்பன பற்றிய விவாதமாகும். இந்த விவகாரத்தில், அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பவர்கள் பற்றியும், மௌனமாக இருப்பவர்கள் பற்றியும் வரலாறு தீர்ப்பளிக்கும். இந்த விவகாரம் தொடர்பில் பொதுஜன வாக்கெடுப்புக்கு போவோம். நண்பர் அனுர குமாரவுக்கு இது வரலாற்றுத் திருப்புமுனை. ஒரு அக்னிப் பரீட்சை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக நிர்வாக நடவடிக்கை என்று நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிக்க அரசாங்கம் முயல்கிறது. ஆனால் அரசாங்கத்தின் இந்த விளக்கம், ஒரு மோசடி என முழு சட்டத்துறையே கூறுகிறது.

வழக்கு நிலுவையை காரணமாக காட்டி நீதித்துறை அமைப்பை மாற்ற முயல்வது, நீதித்துறை சீர்திருத்தம் அல்ல. அது அரசியலமைப்பை திருத்தி அரசியல் நோக்கங்களை அடைய மேற்கொள்ளப்படும் முயற்சி, சட்ட ஆட்சிக்கு எதிரான சதி.இதை தான் அன்று மகிந்த செய்தார். அதை அன்று எதிர்த்த இந்த ஆட்சியாளர்கள் அதையே இன்று செய்யலாமா?

நீதிமன்ற வழக்கு தேக்கத்தை தீர்ப்பது அவசியமானது ஆகும். நீதிவான்கள், நீதித்துறை சேவையின் உறுப்பினர்கள் மற்றும் சட்டத்துறை வல்லுநர்கள் ஏற்கனவே நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளை உள்ளடக்கிய விரிவான எழுத்து மூல பரிந்துரைகளை நீதி அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

வழக்கு தேக்கத்திற்கான முக்கிய காரணங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்தவையே. அவை தேவையான அளவு நிர்வாக, ஊழியர்கள் நியமிக்கப்படாமை, குறிப்பாக மொழிபெயர்ப்பு,கைரேகை அடையாளம், ஆய்வு கூடம்,ஆகிய துறைசார் பணியாளர் நியமனங்கள் இல்லாமை, செயல்திறன் ஆளணி குறைபாடுகள், போதிய பௌதிக வள பற்றாக்குறை, மற்றும் நடைமுறை தாமதங்களே தவிர, நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயது அல்ல.

சட்டத்துறை முன் வைத்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பதில், நீதித்துறையின் சுயாதீனத்தை அச்சுறுத்த கூடிய அரசியலமைப்பு மாற்றங்களை நியாயப்படுத்த இந்த நிர்வாக பிரச்னையை பயன்படுத்த இந்த அரசாங்கம் முயல்கிறது.

இந்த விவகாரம் வெறும் எதிர்க்கட்சிகளின் அரசியல் விமர்சனம் மட்டுமே என்று சித்தரித்து, அரசாங்கம் எதிர்ப்புகளை நிராகரிக்க முயல்கிறது.விசாரணைக்கு உட்பட்டவர்கள்,பிணையில் உள்ளவர்கள் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்பவர் மட்டுமே இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்ற கதையை அது தொடர்ந்து கூறி பார்த்தது. ஆனால் அந்த கதை இப்போது முற்றாக சிதைந்து விட்டது. - என்றார். (அ)

# ராகம பொலிஸ் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஓக. 03

மஹர சிறை கலவரத்தை அடுத்து ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹர சிறைச்சாலையைச் சூழவுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (அ)

# பொலிஸ் நிலையத்தில் ரூ. 2.9 இலட்சம் மோசடி!

## பெண் சார்ஜன்ட் கைது

கொழும்பு, ஓக. 03

இங்கினியாகல பொலிஸ் நிலையத்துக்கு பல்வேறு சேவைகள் ஊடாக வருமானமாகப் பெறப்பட்ட சுமார் 290,000 ரூபாய் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில், அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பெண் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ் விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் இந்தச் சந்தேகநபர் [illegible] பட்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட உள்வாரி கணக்காய்வு பரிசோதனையின் போதே இந்த நிதி முறைக்கேடு கண்டறியப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் மூலம் பெறப்படும் வருமானப் பணத்தை, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவல [illegible] உத்தியோகபூர்வ கணக்கில் முறையாக வைப்பிலிட வேண்டும்.

எனினும், சந்தேகநபரான பெண் பொலிஸ் சார்ஜன்ட் பொலிஸ் நிலையத்துக்குப் பெறப்பட்ட அந்த பணத்தைச் வைப்பிலிடாது தவறியுள்ளமை கணக்காய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்லவின் உத்தரவின் பேரில், அம்பாறை வலய பதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் விக்ரமரத்னவின் மேற்பார்வையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.